FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319467

1. District : Madurai PS: V K AC Year: 2026 FIR No.: 05/2026 Date: 10.06.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Prevention of corruption (amendment) Act 2018. and. BNSS Act. Sections பிரிவுகள்: 7, 7A of PC Act 1988 as amended by PC (amendment) Act 2018. 106 BNSS Act.

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 04.06.2026 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 15.40 hrs Time to : 21.00 hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 05.06.2026 Time : 17.30 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 10.06.2026 Time : 16.30 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Typed complaint.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: West, 8 km
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : o/o Sub-Registrar, Vilangudi, Madurai North, Madurai
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின். அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tmt. P. Jayasharmila (b) Father's/ Husband's Name : —
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : — (d) Nationality : Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Deputy Inspection Cell Officer (g) Address : o/o District Inspection Cell officer Madurai District.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. R. Dineshkumar, Assistant, Sub-Registrar i/c o/o Vilangudi, Madurai North, Madurai 2) Tr. N. Boopalan, Assistant to Document writer 3) Tr. J. Marivel Raajan, Document writer and 4) Tr. S. Ravikumar, Land Broker, Madurai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Attached Seperate Sheet pages 3 to 8

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

10/6/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 10.06.2026 / 17.45 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. Kumaraguru
Rank: நிலை Inspector of Police, VAC, Madurai.

Honoured Sir,

Submitted,

மதுரை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.P.ஜெயஷர்மிளா அவர்கள் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் 05.06.2026-ம் தேதி மாலை 17.30 மணிக்கு ஆஜராகி என்னிடம் தனி அறிக்கை அளித்தார். மேற்படி தனி அறிக்கையுடன் ஒப்படைத்த மதுரை வடக்கு, விளாங்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை 04.06.2026 - 15.40 மணி முதல் 21.00 மணி வரை, திடீர் இணை ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.87,000/-, 10 ஆவணங்கள், பொறுப்பு சார்பதிவாளர் திரு.தினேஷ்குமார், உதவியாளர் திருமதி.ஷீஜாகுமாரி, கேமரா ஆப்பரேட்டர் திரு.சுந்தர்ராஜன், தகவல் தொகுப்பு பணியாளர் திருமதி.மகாலெட்சுமி, ஆவண எழுத்தரின் உதவியாளர் திரு.பூபாலன், ஆவண எழுத்தர் திரு.மாரிவேல்ராஜன், நில தரகர் திரு.ராம்குமார் ஆகியோர்களிடம் பெற்ற வாக்குமூலம் ஆகியவற்றை பார்வையிட்டேன். மேற்படி தனி அறிக்கையில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர் திருமதி.P.ஜெயஷர்மிளா, B.Sc., துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர் அலுவலகம், மதுரை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க.எண். 14/ 2026/ஐ1, நாள் : 05.06.2026, அய்யா, பொருள் : மதுரை மாவட்டம் - திடீர் இணை ஆய்வு - பதிவுத் துறை - மதுரை வடக்கு, விளாங்குடி சார்-பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் பொது மக்களிடம் பத்திர எழுத்தர்கள் மூலமாக லஞ்சம் பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - ரூ.87,000/- பணம் கைப்பற்றப்பட்டது - மேல் நடவடிக்கை எடுக்க கோருவது - தனி அறிக்கை அனுப்புதல் தொடர்பாக. நேற்று 04.06.2026-ம் தேதியன்று, மதுரை கரிசல்குளம் பாண்டியன் நகரில் அமைந்துள்ள விளாங்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் பத்திரம் பதிவு செய்வதற்காக வரும் பொது மக்களிடம் பத்திர எழுத்தர்கள் மூலமாக லஞ்சம் வாங்குவதாக மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல்

ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலை 12.00 மணிக்கு ஆய்வுக்குழு அலுவலருக்கு தெரிவித்தார். பின்னர் அந்த தகவலை விசாரித்து விட்டு மேற்படி அலுவலகத்தில் திடீர் சோதனை செய்யலாம் என கூறியதன் பேரில், நானும், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர்கள் திரு.K.குமரகுரு, திருமதி.C.ஜெயப்பிரியா மற்றும் போலீஸ் பார்ட்டியினரும் இணைந்து தென்வடலாக செல்லும் கரிசல்குளம் பாண்டியன் நகர் மெயின் சாலையின் கிழக்குப்பக்கம் மேற்குநோக்கிய பிரதான வாசலுடன் அமைந்துள்ள உள்ள சார்-பதிவாளர் அலுவலகத்தை 04.06.2026 -ஆம் தேதி மதியம் 14.50 மணி முதல் தொடர்ந்து கண்காணித்த போது, மேற்படி அலுவலகத்தின் உள்ளே சார்-பதிவாளர் இருக்கையில் இருந்தார். பொது மக்களும், பத்திர எழுத்தர்களும் அலுவலகத்தின் உள்ளே சென்று திரு. R.தினேஷ்குமார் அவர்களை தனித்தனியாக சந்தித்து பேசிவிட்டு வந்தனர். அவர்களை விசாரிக்க, மேற்சொன்னவாறு அந்த அலுவலகத்தில் பொதுமக்களிடம் பணம் பெறுவதாக கூறினர். பின்னர் மதியம் சுமார் 15.40 மணியளவில் மதுரை மாவட்ட துணை ஆய்வுக் குழு அலுவலராகிய நான் மற்றும் மதுரை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர்கள் திரு.K.குமரகுரு, திருமதி. C. ஜெயப்பிரியா மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் அலுவலகத்திற்கு உள்ளே சென்று அங்கே சார்பதிவாளர் இருக்கையில் அமர்ந்திருந்த திரு. R.தினேஷ்குமார் அவர்களிடம் என்னையும், காவல் ஆய்வாளராகிய திரு.குமரகுரு மற்றும் போலீஸ் பார்ட்டியினரை அறிமுகம் செய்த பின்னர் சார் பதிவாளர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்வது குறித்து விபரம் தெரிவித்து விசாரித்ததில், அவர் தனது பெயர் தினேஷ்குமார் என்றும், தான் தல்லாகுளம் சார்-பதிவாளர் அலுவலகத்தின் உதவியாளர் எனவும், கடந்த 13.05.2026 ஆம் தேதி முதல் பகராண்மையில் விளாங்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளர் மற்றும் சார்-பதிவாளர் பொறுப்பையும் ஏற்று பணிபுரிந்த வருவதாகவும், விளாங்குடி சார்-பதிவாளர் திரு.பன்னிரு கைவேல், பகராண்மை பணியாக வாடிப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்-பதிவாளராக சென்றுவிட்டதாகவும் தெரிவித்தார். மேலும் விளாங்குடி சார்-பதிவாளர் அலுவலகத்தில் தற்போது

உதவியாளர் திருமதி.V.ஷீஜாகுமாரி, Camera Operator திரு. R. சுந்தரராஜன், Data Entry Operator (தற்காலிகம்) திருமதி.மஹாலட்சுமி ஆகியோர் பணிபுரிவதாகவும் தெரிவித்தார். மேலும் இவ்வலுவலக பணியாளர்களான உதவியாளர் திருமதி.சுஜா, இளநிலை உதவியாளர் திரு.பாலகுரு, அலுவலக உதவியாளர் திருமதி.முகம்மதுஅலிகான் ஆகியோர் பகராண்மையில் வெளி அலுவலாக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேற்படி அலுவலகத்தின் ஹாலில் சார்பதிவாளர் இருக்கைக்கு செல்லும் அறையின் நுழைவுவாயில் முன்பாக Camara Operator ன் இருக்கை தெற்கு பார்த்தவாறு காணப்பட்டது. அந்த இருக்கையில் Camara Operator திரு.சுந்தரராஜன் அவர்கள் அமர்ந்திருந்தார். அவரை சோதனை செய்தபோது அவர் தன்னிடமிருந்து ரூபாய் 300/- யை ஆஜர் செய்தார். அவர் அந்த பணம் தனது செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால், அந்த பணம் ரூபாய் 300/- யை அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேற்படி ஹாலின் சேர்களில் பதிவிற்காக வந்திருந்த பொதுமக்களும், ஆவண எழுத்தர்களும் அமர்ந்திருந்தனர். அதில் ஆவண எழுத்தர் திரு.பிச்சைமணி அவர்களிடம் உதவியாளராக பணிபுரியும் திரு.N.பூபாலன் என்பவரை சோதனை செய்தபோது, அவர் தன்னிடமிருந்து கத்தையாக பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை வாங்கி எண்ணிப்பார்த்தபோது அதில் மொத்தம் ரூ.73,800/- இருந்தது. அந்த பணம் குறித்து கேட்டபோது ரூ.73,000/- (500 X 146) மதுரை தெற்கு-1 சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ததற்காக பார்ட்டி கொடுத்த பணம் என்றும், ஆனால் அதற்கான ஆவணங்கள் ஏதும் இல்லை என்று மேற்படி பணத்திற்கு தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை. பணம் பெற்றதற்கான தகுந்த முகாந்திரம் இல்லாததால் என்னால் அந்த பணம் ரூ.73,000/- ம் கைப்பற்றப்பட்டது. மேலும் ரூ.800/- தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்ததால் அந்த பணம் ரூ.800/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், ஹாலில் இருந்த ஆவண எழுத்தர் திரு.மாரிவேல்ராஜன் அவர்களை சோதனை செய்தபோது அவர் தன்னிடமிருந்து கத்தையாக பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை வாங்கி எண்ணிப்பார்த்தபோது அதில் மொத்தம் ரூ.4,000/- இருந்தது. அந்த

பணம் குறித்து கேட்டபோது ரூ.4,000/- த்திற்கு (500 X 6, 200 X 5), தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை. ஆனால் அதற்கான ஆவணங்கள் ஏதும் இல்லை என்றும் கூறினார். தகுந்த முகாந்திரம் இல்லாததால் என்னால் அந்த பணம் ரூ.4,000/- ம் கைப்பற்றப்பட்டது. மேலும் ரூ.880/- தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்து, அந்த பணம் ரூ.880/- எடுத்து ஆஜர் செய்ததை, அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், அந்த ஹாலில் இருந்த நிலதரகர் திரு.ராம்குமார் அவர்களை சோதனை செய்தபோது அவர் தன்னிடமிருந்து கத்தையாக பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை வாங்கி எண்ணிப்பார்த்தபோது அதில் மொத்தம் ரூ.10,000/- இருந்தது. அந்த பணம் குறித்து கேட்டபோது தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை. மேலும் அதற்கான ஆவணங்கள் ஏதும் இல்லை என்றும் கூறினார். தகுந்த முகாந்திரம் இல்லாததால் என்னால் அந்த பணம் ரூ.10,000/- (500 X 20) ம் கைப்பற்றப்பட்டது. மேலும் தனது சொந்தப்பணம் என்று ரூ.3,060/- எடுத்து ஆஜர்படுத்தியதை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் சார்பதிவாளர் அறையில் உதவியாளர், சார்பதிவாளர் பொறுப்பு திரு.தினேஷ்குமார் அவர்களை சோதனை செய்தபோது அவர் தன்னிடம் ரூ.150/- தனது செலவிற்காக வைத்திருப்பதாக சொல்லி ஆஜர் செய்தார். அந்த பணம் ரூ.150/- திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் இன்று 35 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும், மூன்று திருமண பதிவுகள் செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார். மேலும் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எழுத்தர்களோ, ஆவண எழுத்தர்களின் உதவியாளர்களோ சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பதிவின்போது வருவதற்கு அனுமதியில்லை என்றும், பதிவிற்கான கட்டணங்களோ, இதர கட்டணங்களோ ஆன்லைனில் தான் செலுத்தவேண்டும் என்றும் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணபரிவர்த்தனைகள் ஏதும் செய்யப்படுவதில்லை என்றும் தெரிவித்தார். பின்னர் அந்த அறையிலிருந்த உதவியாளர் திருமதி.ஷீஜாகுமாரி மற்றும் தகவல் தொகுப்பு பணியாளர் திருமதி.மகாலெட்சுமி ஆகியோர்களை காவல் ஆய்வாளர் திருமதி.ஜெயப்பிரியா அவர்கள் சோதனை செய்ய அவர்கள் தங்களிடமிருந்து தலா ரூ.100/- தங்களது செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்து ஆஜர்

செய்தார்கள். அந்த பணம் ரூ.100/- அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மேல் விசாரணைக்காக விளாங்குடி, சார்-பதிவாளர் அலுவலக உதவியாளர், சார்-பதிவாளர் பொறுப்பு வகித்த திரு.தினேஷ்குமார் அவர்கள் ஆஜர் செய்த 1) தனி நபர் பண இருப்பு பதிவேடு (1 முதல் 17 வரை எழுதிய பக்கங்கள்), 2) தொகுதி வருகைப்பதிவேடு (1 முதல் 5 வரை எழுதிய பக்கங்கள்), 3) இயக்கப்பதிவேடு (01.01.2026 முதல் --) (1 பக்கம்), 4) தொகுதி - தணிக்கை வருகைப்பதிவேடு (01.01.2026 முதல் -) (1 முதல் 17 வரை எழுதிய பக்கங்கள்) 5) பணியாளர் வருகைப் பதிவேடு வருடம் 2026 (1 முதல் 6 வரை எழுதிய பக்கங்கள்) 6) Abstract of Account A Vilangudi for the month of June 2026 (dated 04.06.2026) 7) Sale Deed in Doc No.2914/2026 (Page -1), 8) சுத்த கிரைய பத்திரம் ஆவண எண்.34/2026 (பக்கம்-1), 9) பதிவுத்துறை இரசீது - தமிழ்நாடு திருமணம் - படிவம்-1 திருமண பதிவு எண்.TMR/VILANGUDI/46/2026 (பக்கம் - 1 முதல் 2 வரை), பதிவுத்துறை இரசீது - இந்து திருமணம், திருமண பதிவு எண்.HMR/VILANGUDI/33/2026 (பக்கம் - 1 முதல் 2 வரை) ஆகிய ஆவணங்களை நான் கைப்பற்றினேன். மேலும் சோதனையின் போது விளாங்குடி சார்பதிவாளர் அலுவலக பொறுப்பு சார்பதிவாளர் திரு.தினேஷ்குமார், உதவியாளர் திருமதி.ஷீஜாகுமாரி, கேமரா ஆப்பரேட்டர் திரு.சுந்தர்ராஜன், தகவல் தொகுப்பு பணியாளர் திருமதி.மகாலெட்சுமி, ஆவண எழுத்தரின் உதவியாளர் திரு.பூபாலன், ஆவண எழுத்தர் திரு.மாரிவேல்ராஜன், நில தரகர் திரு.ராம்குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி திடீர் இணை ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.87,000/- , 10 ஆவணங்கள், 7 வாக்குமூலங்கள் ஆகியவற்றை இணைத்து விளாங்குடி சார்பதிவாளர் அலுவலக உதவியாளர் (பொறுப்பு சார்பதிவாளர்) திரு.தினேஷ்குமார் மற்றும் ஆவண எழுத்தரின் உதவியாளர் திரு.பூபாலன், ஆவண எழுத்தர் திரு.மாரிவேல்ராஜன், நில தரகர் திரு.ராம்குமார் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி தங்களிடம் இந்த அறிக்கையை அளிக்கிறேன். ஒப்பம்/- XXXXX 5.6.2026 (திருமதி.P.ஜெயஷர்மிளா), துணை ஆய்வுக்குழு

அலுவலர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர் அலுவலகம், மதுரை மாவட்டம். இணைப்பு : 1) திடீர் இணை ஆய்வு குறிப்புரை, நாள். 5.6.2026. 2)கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.87,000/-. 3) விளாங்குடி சார்-பதிவாளர் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட 10 ஆவணங்கள். 5) ஏழு வாக்குமூலங்கள்.

Sir, Received this report on 05.06.2026 at 17.30 hrs along with Joint Surprise Check Proceedings dated 04.06.2026, Cash Rs. 87,000/-, 7 Statements and 10 documents. After obtaining permission from the Superior Officers, I have registered a case in Madurai V&AC Crime No.05/2026 u/s 7, 7A of P.C. Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 and 106 BNSS Act on 10.06.2026 at 16.30 hrs. Sd/- XXXXX 10/06/2026 (K.Kumaraguru), Inspector of Police, V&AC, Madurai.

The original FIR along with report dated 05.06.2026 of Tmt.P.Jeyasharmila, Joint Surprise Check Proceedings Dated: 04.06.2026, Statements of officials (4) and statement of the Private Individuals (3) are submitted to the Hon'ble Principal District Judge, Principal District and Sessions Court Madurai and other copies were sent to the officers concerned.

10/6/2026.

(K.Kumaraguru),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Madurai.
(10.06.2026).